# என்டியுவில் புதிய கற்றல் மையம்

பல்கலைக்கழக மாணவர்கள் பெரிய விரிவுரை அரங்குகளில் வரிசையாக அமர்ந்து, விரிவுரையாளர் கூறும் விவரங்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கும் காலம் இப்போது மாறி விட்டது. நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (என்டியு) இப்போது 280க்கும் மேலான 'அறிவார்ந்த' வகுப்பறைகள் உள்ளன. ஒவ்வொரு வகுப்பறையிலும் பற்பல எல்இடி காட்சித்திரைகளும் நகர்த்தக்கூடிய இருக்கைகளும் கம்பியில்லா தொடர்புக் கருவிகளும் உள்ளன.

ஆகப்புதிதாக, 56 அறிவார்ந்த வகுப்பறைகள் கொண்ட 'த ஆர்க்' எனும் ஆறு மாடி கட்டடத்தை என்டியு நேற்று அறிமுகப் படுத்தியது. மொத்தம் $41.5 மில்லியன் செலவில் கட்டப்பட்ட இக்கட்டடத்தில் 13 திட்டப்பணி கலந்துரையாடல் அறைகளும் படிப்பதற்கான அறையும் 108 இருக்கைகள் கொண்ட விரிவுரை அரங்கமும் உள்ளன.

முதல் இரண்டு மாடிகளில் பொறியியல் மாணவர்களுக்கான பட்டறை அறைகள் உள்ளன.

என்டியுவின் "சிங்கப்பூர் முப்பரிமாண அச்சு நிலைய" வசதிகளில் பெரும்பாலானவையும் புதிய கட்டடத்தில் அமைந்திருக்கும். அச்சிடக்கூடிய மின்னணுப் பொருட்கள், இலகுரக விமானப் பாகங்கள், முப்பரிமாண மருத்துவப் பதிப்புகள் போன்ற அறிவார்ந்த தொழில்நுட்பங்களில் இந்நிலையம் ஆய்வு மேற்கொள்ளும்.

மாணவர்கள் கலந்து பேசவும், பல்வேறு துறைகளுக்கு இடையில் கலந்துறவாடவும் வாய்ப்பளிக்கும் வகையில் 'த ஆர்க்' கட்டடம் வடிவமைக்கப்பட்டிருப்பதாக என்டியு தலைவர் சுப்ரா சுரேஷ் கூறினார்.

"வகுப்பறையின் வடிவமைப்பு கற்பிக்கும் பாணியிலும், அறிவாற்றல் பகிரப்படும் முறையிலும், ஒட்டுமொத்த கற்றலின் பயனிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதால்" வசதிகளும் உள்கட்டமைப்பும் முக்கியமானவை என்றார் அவர்.

புதிய கற்றல் முறையுடன், மாணவர்கள் வகுப்பு தொடங்குவதற்கு முன்பாகவே அன்றைய பாடத்தை இணையத்தில் படித்து விடலாம். இதன்வழி, வகுப்பறை நேரம் விரிவான கற்றல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

'த ஆர்க்' கட்டடம் என்டியுவின் இரண்டாவது கற்றல் மையமாகும். முதல் மையமான 'த ஹைவ்' 2015ல் அறிமுகமானது. இதில் 55 அறிவார்ந்த வகுப்பறைகள் உள்ளன.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் குறைந்தது 50 விழுக்காடு பட்டப்படிப்பு பாடத்துறைகளை புதிய கற்றல் முறைக்கு மாற்றியமைப்பது என்டியுவின் இலக்கு என்றும், அந்த இலக்கு திட்டமிட்டபடி ஈடேறி வருவதாகவும் நேற்றைய நிகழ்ச்சியின்போது பேராசிரியர் சுரேஷ் தெரிவித்தார்.